# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT – II ( MARCH – 2013 )

**Time : 3 Hours** | **TAMIL** | **Maximum marks : 90**

நேரம் : 3 மணி | **CLASS - VI** | மதிப்பெண்கள் : 90

## தமிழ் - ஆறாம் வகுப்பு

---

## பகுதி – 1

அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி 5 x 2 = 10

கிளியைப் பேசுவதற்குப் பழக்கலாம். நாம் கூறும் சொற்களை அது திருப்பிச் சொல்லும். சிட்டுக்குருவி போல உருவத்தில் சிறியதாயும் , பருந்து போன்று மிகப்பெரியதாயும் உடைய கிளிகள் பல வகை உண்டு. நாம் பார்ப்பவை பச்சைக் கிளிகளாகும். சுமார் 300 வகை கிளிகள் உள்ளன. பஞ்சவண்ணக்கிளியின் தலை , ஊதா நிறமாய் இருக்கும் ; உடல் , பச்சை நிறமாய் இருக்கும் ; சிறகுகள் , சிவப்பு நிறமாய் இருக்கும் ; வால் , நீல நிறமாய் இருக்கும் ; அலகு , மஞ்சள் நிறமாய் இருக்கும். சிலவகைக் கிளிகளுக்கு தலையில் அழகான கொண்டையும் உண்டு. 'கன்னிக்கிளி' என்னும் ஒருவகைக் கிளியைத் தமிழ்நாட்டின் தென்பகுதியில் மலைச்சாரல்களில் காணலாம். கிளியின் உணவு பழங்கள் , கொட்டைகள் , விதைகள் முதலியன. கொட்டையை உடைப்பதற்கு ஏற்றவாறு இதன் அலகு வளைந்து கூர்மையாயும் உறுதியாயும் இருக்கும். கிளி பெரும்பாலும் வெப்ப நாடுகளில் வாழும். தோப்புகளில் கூட்டம் கூட்டமாய்க் காணலாம். இ∴து இம்பது ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழும். 'கிளிக்காய்ச்சல்' என்னும் நோய் , கிளி மூலம் மற்ற பறவைகளுக்கும் மக்களுக்கும் பரவுகிறது.

வினாக்கள்

1. மேலே சொல்லப்பட்ட கிளியின் வகைகள் எவை எவை.?

2. ' கன்னிக்கிளி' எங்கு காணப்படுகிறது ?

3. கிளியின் உணவு யாது ? அதன் அலகு எத்தன்மையது ?

4. கிளியின் வாழ்நாள் எவ்வளவு ? கிளியின் மூலம் பரவும் நோய் யாது ?

5. பஞ்சவண்ணக்கிளியினைப் பற்றி எழுதுக.

ஆ. பின்வரும் தலைப்பில் உள்ள கட்டுரைகளில் ஒன்றினை எழுதுக. 1 x 10 = 10

1. சிறுசேமிப்பு

2. நீ விரும்பும் விளையாட்டு

இ. கடிதம் எழுதுக. 1 x10 = 10

உன் பிறந்தநாள் விழாவிற்கு தோழன்/தோழியை அழைத்து கடிதம் எழுதுக.

## பகுதி - 2

அ. பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக 3 x 1 = 3

1. வருங்காலம்

அ) நான் படித்தேன் ஆ) நான் படிக்கிறேன் இ) நான் படிப்பேன்

2. கட்டளை வாக்கியம்

அ) இம்மலை என்னே அழகு ! ஆ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோ

இ) வீட்டை சுத்தம் செய் !

3. செயப்பாட்டு வினை

அ) வில் இராமனால் வளைக்கப்பட்டது ஆ) நீ என்ன செய்கிறாய் ?

இ) கண்ணன் மரத்தை வெட்டினான்

ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக 3 x 1 = 3

1. கருத்து வகை வாக்கியங்கள் ____________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து

2. வருங்காலம் ____________ என்றும் அழைக்கப்படும்.

அ) நல்ல காலம் ஆ) எதிர்காலம் இ) வேனிற்காலம்

3. கிழக்கே சூரியன் உதிக்கிறது என்பது ____________ வாக்கியம்.

அ) கட்டளை வாக்கியம் ஆ) வினா வாக்கியம் இ) செய்தி வாக்கியம்

இ. அடைப்புக்குள் கூறியவாறு சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1. என்னே நீலகிரி மலையின் அழகு ! ( செய்தி வாக்கியமாக மாற்றுக )

அ) நீலகிரி மலை எப்படி இருக்கிறது ?

ஆ) நீலகிரி மலைக்குச் செல் !  இ) நீலகிரி மலை மிகவும் அழகு

2. காவலர் திருடனைப் பிடித்தனர் ( செயப்பாட்டு வினையாக மாற்றுக )

அ) திருடன் காவலரால் பிடிபட்டான்  ஆ) காவலர் திருடனைப் பிடித்தனரா ?

இ) திருடன் காவலரைப் பிடித்தான்

3. மறுநாள் பள்ளி விடுமுறை என்று ஆசிரியர் கூறினார் ( நேர்கூற்றாக்குக )

அ) ஆசிரியர் , "நாளை பள்ளி விடுமுறை" என்றார்.

ஆ) ஆசிரியர் , "மறுநாள் பள்ளி விடுமுறை" என்றார்.

இ) ஆசிரியர் , "மறுநாள் பள்ளி விடுமுறை அல்ல" என்றார்.

ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக  3 x 1 = 3

1. பால் குழந்தையால் குடிக்கப்பட்டது

அ) செயப்பாட்டு வினை  ஆ) நேர்கூற்று  இ) செய்வினை

2. தாம் , தாங்கள்

அ) நேர்கூற்று  ஆ) அயற்கூற்று  இ) செயப்பாட்டு வினை

3. இராமனின் மனைவி யார் ?

அ) செய்தி வாக்கியம்  ஆ) வினா வாக்கியம்  இ) கட்டளை வாக்கியம்

உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக  3 x 1 = 3

1. அ) முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடர் - வாக்கியம்

ஆ) முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடர் - நேர்கூற்று

இ) முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடர் - செயப்பாட்டு வினை

2. அ) வெல்லம் என்பதன் பொருள் இனிப்புக்கட்டி

ஆ) வெல்லம் என்பதன் பொருள் நீர்ப்பெருக்கு

இ) வெல்லம் என்பதன் பொருள் உண்ணுதல்

3. அ) நடந்து முடிந்த நிகழ்ச்சியைக் குறிப்பது இறந்தகாலம்

ஆ) நடந்து முடிந்த நிகழ்ச்சியைக் குறிப்பது நிகழ்காலம்

இ) நடந்து முடிந்த நிகழ்ச்சியைக் குறிப்பது வருங்காலம்

## பகுதி - 3

அ. பொருள் தருக. 3 x 1 = 3

1) உற்றுழி 2) புரவி 3) தண்கடல்

ஆ) பிரித்து எழுதுக. 3 x 1 = 3

1) பெருந்தலைவர் 2) மின்னாற்றல் 3) தொலைவிலிருந்து

இ. சேர்த்து எழுதுக. 3 x 1 = 3

1) மரம் + பொம்மை 2) தொழில் + சாலை 3) அ + நாடு

ஈ. எதிர்ச்சொற்களால் நிரப்புக. 2 x 1 = 2

1) வேளாண்மையில் ______________ முறைகளைப் புகுத்த வேண்டும். ( செயற்கை )

2) அறிவியல் கண்காட்சியைப் பார்ப்பது நமக்கு ____________ தரும். ( வருத்தம் )

உ. சொற்றொடர் படிக்கட்டு அமைக்க. 4 x ½ = 2




ஊ. தொகைச் சொற்களை விரித்து எழுதுக. 2 x 1 = 2

1) முத்தமிழ் - ______________ , ____________ , _____________

2) முக்கனி - ______________ , ____________ , _____________

## பகுதி - 4

அ.கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

காமராசர் அவர்கள் விருதுபட்டியில் ( விருதுநகர் ) 1903 –ம் ஆண்டு சூலைத்திங்கள் 15 –ம் நாள் குமாரசாமிக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாய் பிறந்தார். தம் ஆறாம் வயதிலேயே தந்தையை இழந்து விட்டார். வீட்டில் வறுமை ஏற்பட்டது. எனவே படிப்பை நிறுத்துவிட்டுக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். காந்தியடிகள் தலைமையில் நாட்டு விடுதலைக்காக அறப்போராட்டங்கள் நடைபெற்றன.காமராசர் தானும் அப்போராட்டங்களில் கலந்து கொண்டார்.காமராசர் ஒன்பது முறை சிறை சென்றார்.மூவாயிரம் நாட்கள் சிறையில் இருந்தார் .பின் 1954 –ம் ஆண்டு தமிழக முதலமைச்சர் ஆனார். இவர்தம் ஆட்சி காலத்தில் பல அணைகளைக் கட்டினார். வடஇந்தியச் செய்தித்தாள்கள் இவரைக் 'காலா காந்தி' எனப் போற்றின.

வினாக்கள்

1.காமராசர் பிறந்த ஊர் ____________

அ) வில்லிவாக்கம் ஆ) விருதுநகர் இ) தூத்துக்குடி

2.இவர் பள்ளிப்படிப்பை விடக் காரணம் ____________

அ) நாட்டமில்லை ஆ) வறுமை இ) கடையில் வேலைப் பார்த்ததால்

3.காமராசர் சிறையில் இருந்த நாட்கள் ____________

அ) ஒன்பது நாட்கள் ஆ) இருநூறு நாட்கள் இ) மூவாயிரம் நாட்கள்

4.இவர் முதலமைச்சரான ஆண்டு ____________

அ) 1903 ஆ) 1954 இ) 1975

5.' காலகாந்தி' என போற்றப்பட்டவர் ____________

அ) குமாரசாமி ஆ) காமராசர் இ) தந்தை பெரியார்

ஆ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1.வள்ளுவர் 'இழுக்கு' என்று எதைச் சொல்கிறார் ?

அ) ஒரு செயலை ஆராயாமல் செய்வது

ஆ) ஒரு செயலை ஆராய்ந்து செய்வது

இ) எந்த செயலையும் செய்யாமல் இருப்பது

2.நீர் வற்றிய காலத்தில் குளத்தை விட்டு நீங்கிச் செல்பவை எவை ?

அ) நீர்த்தாவரங்கள் ஆ) உறவினர்கள் இ) நீர்ப்பறவைகள்

3.நறுந்தொகை ஆசிரியர் யார் ?

அ) பாரதிதாசனார் ஆ) ஔவையார் இ)அதிவீரராம பாண்டியன்

4.காமராசர் தமிழ்நாட்டில் பெற்ற பதவி என்ன ?

அ) கல்வி அமைச்சர் ஆ) முதலமைச்சர் இ) தமிழக ஆளுநர்

5.ரோபோவின் மூளையாகச் செயல்படுவது எது ?

அ) சிலிக்கான் சில்லு ஆ) ரோபோலான் இ) ஒலிவாங்கி

இ.ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 3 x 4 = 12

1.தெரிந்து செயல்வகை , சான்றாண்மை குறித்து எழுதுக.

2.உறவு , உறவல்லர் பற்றி ஔவையார் கூறுவன யாவை ?

3.காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?

4.ரோபோ செய்யும் பணிகள் யாவை ?

5.புரவி எடுப்பு என்றால் என்ன ?

ஈ.அடிமாறாமல் எழுதுக.

1.' குணம் நாடி' - எனத் தொடங்கும் குறள் 2

2.' சால்பு ' - என முடியும் குறள் 2

3.' அற்ற குளத்தில்' -எனத் தொடங்கும் மூதுரை 4

*****************